
- - 12

முதலாம்தவணை

- 

சங்க நூல்கள்



# தமிழ்

சங்க காலம்

MR.M.PAAKIYANADHAN
CP/N/NAWALAR COLLEGE NANUOYA

♦ பாவலரோடும் காவலரோடும் கைகோர்த்து கவிபுணைந்து கன்னித்தமிழ் வளர்ந்த காலம் சங்ககாலம்.

♦ அழிந்து மறைந்தவை போக எஞ்சியவை காக்கப்பட்டு புலவர்களாலும் புரவலர்களாலும் தொகுக்கப்பட்டது.

♦ தமிழின் செவ்வியல் தன்மைக்கு சான்றாக சங்க இலக்கியம் திகழ்கின்றன.

♦ பாட்டும் தொகையுமாக 18 நூல்களும் சங்க இலக்கியங்கள் ஆகும்.

♦ தமிழ் மக்களின் அக மற்றும் புற வாழ்வியல் கூறுகளை அறிய உதவும்.




சங்க பாடல்களின் எண்ணிக்கை -- 2381
அகப்பாடல்களின் எண்ணிக்கை – 1862
புறப்பாடல்களின் எண்ணிக்கை – 519
சங்கப்புலவர்களின் எண்ணிக்கை – 473
பெண்பாற் புலவர்களின் எண்ணிக்கை – 49

♦ முற்சங்கங்கள் அமைக்கப்பட்டு தமிழை வளர்த்த காலமாகும்.

# முற்சங்கங்கள்



## முதற் சங்கம்

புலவர்கள்

**அகத்தியர்**

**முரஞ்சியூர் முடிநாகராயர்**

நூல்கள்

அகத்தியம்

முதுகுறுகு

முதுநாரை

## இடை சங்கம்

புலவர்கள்

**தொல்காப்பியர்**

**வல்லுர்காப்பியர்**

நூல்கள்

வெண்டாலி

வியாழபாலை

அகவல்

## கடைச்சங்கம்

புலவர்கள்

**பரணர்**

**நக்கீரர்**

**ஔவையார்**

நூல்கள்

பதினெண் மேற்கணக்கு நூல்கள்

# பதினெண் மேற்கணக்கு நூல்கள்

## எட்டுத்தொகை

### அகம்

அகநானூறு
நற்றிணை
குறுந்தொகை
கலித்தொகை
ஐங்குறுநூறு

### புறம்

புறநானூறு
பரிபாடல்
பதிற்றுப்பத்து

## பத்துப்பாட்டு

### அகம்

குறிஞ்சிப்பாட்டு
முல்லைப்பாட்டு
பட்டினப்பாலை

### புறம்

திருமுருகாற்றுப்படை
பொருணாறாற்றுப்படை
சிறுபாணாற்றுப்படை
பெருபாணாற்றுப்படை
மலைப்படுகடாம் ( கூத்தறாற்றுப்படை
நெடுகல்வாடை
மதுரைக்காஞ்சி

அகநானூறு

♦ பல புலவர்களால் பாடப்பட்டது.
♦ 400 பாடல்கள் காணப்படுகின்றது.
♦ பாடல்கள் 13-31 வரிகள் கொண்டவை.
♦ 200 பாடல்கள் பாலை திணையிலும் 80 பாடல்கள் குறிஞ்சி திணையிலும் முல்லை , மருதம் நெய்தல் ஆகியவற்றுக்கு தலா 40 பாடல்கள் வீதம் காணப்படுகின்றது.

நற்றிணை

♦ பல புலவர்களால் பாடப்பட்டது.
♦ 400 பாடல்கள் காணப்படுகின்றது.
♦ 8-13 வரிகளை கொண்டது.
♦ 234 வது பாடல் முழுமையாக கிடைக்கபடவில்லை.




குறுந்தொகை

- 400 பாடல்கள் உள்ளன.
- 4-8 வரிகள் உள்ளன.

ஐங்குறுநூறு

- 5 புலவர்களால் பாடப்பட்டது.
- 500 பாடல்கள் உள்ளன.
- 5 திணைகளுமாக நூறு பாடல்கள் காணப்படுகின்றன.
- ஒவ்வொரு திணையினையும் ஒவ்வொரு புலவர்கள் பாடியுள்ளனர்.
- குறிஞ்சி – கபிலர்
- முல்லை – பேயனார்
- மருதம் - ஓரம்போகியார்
- நெய்தல் - அம்மூவனார்
- பாலை - ஓதலாந்தயார்

- இந்நூலில் இரண்டு பாடல்கள் கிடைக்கப்படவில்லை. (129,130)
- 3-6 வரிகளைக் கொண்டது.

கலித்தொகை

இது ஐந்து புலவர்களால் பாடப்பட்டது.
150 பாடல்களைக் கொண்டது.
பாடல்கள் 11-------80 வரிகள் கொண்டவை.
ஆயர் குடியினரின் ஏறு தழுவுதல் பற்றிய விவரங்கள் இந்நூலில் மட்டுமே உள்ளன.




## புறநானூறு

- பல புலவர்களால் எழுதப்பட்டது.
- 400 பாடல்களைக் கொண்டது.
- பாடல்கள் 4-40 வரிகள் கொண்டது.
- மூவேந்தர்கள் குறுநிலமன்னர்கள் ,பாணர் , புலவர் , விறலியர் ,கொடை ,மறம் ,வீரர்கள ̇, நாடு ,மலை ,போர் , வீரத்தாய்மார்கள் பற்றி கூறப்பட்டுள்ளது.

## பதிற்றுப்பத்து

- புறம் சார்ந்த நூல்
- சேரமன்னர்களுக்காக எழுதப்பட்ட நூல்
- 10 மன்னர்களைப் போற்றி பத்துப்பத்துப் பாடல்கள் எழுதப்பட்டுள்ளது. ஆனால் 80 பாடல்கள் தான் நமக்குக் கிடைத்துள்ளன.
- பாடல்கள் 8-56 வரிகளைக் கொண்டவை.



பரிபாடல்

- இது அகமும் புறமும் கொண்ட நூல்
- பல புலவர்களால் எழுதப்பட்டது.
- முருகனுக்கும் திருமாலுக்கும் வைகை நதிக்கும் எழுதப்பட்டன.
- 70 பாடல்கள் உள்ளன.
- நமக்கு கிடைத்தது 22 பாடல்கள்
- பாடல்கள் 32-140 வரிகள் கொண்டவை.

திருமுருகாற்றுப்படை

- ❖ 317 அடிகளைக் கொண்டது.
- ❖ முருகனை பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு நக்கீரரால் பாடப்பட்டது.
- ❖ முருகனின் அறுபடை வீட்டுச் சிறப்பு வழிபாட்டுச் சிறப்பு கூறுகிறது.

பொருநறாற்றுப்படை

- ❖ 248 அடிகளைக் கொண்டது.
- ❖ புலவர் முடத்தாமக் கண்ணியார் சோழ கரிகால் பெருவளத்தானுக்காக எழுதியது
- ❖ சோழ மன்னன் கரிகாலன் தன்னை நாடிவந்த பாணனுக்கு நான்கு வெள்ளைக் குதிரைகளைக் கொண்ட தேரை கொடுத்து ஏழு அடி பின் நடந்து பாணனை தேரில் ஏறக் கூறிச் சிறப்பிப்பதாக குறிப்பு உள்ளது.
- ❖ சோழநாட்டின் வளம், காவிரியின் வளம் விவரிக்கப்பட்டுள்ளது.



சிறுபாணாற்றுப்படை

❖ 269 அடிகளைக் கொண்டது.
❖ இடைக்கழி நாட்டின் நல்லூர் நந்தனாரால் பாடப்பட்டது.
❖ ஓய்மான் நாட்டு மன்னனான நல்லியக்கோடனை போற்றிப்பாடப்பட்டுள்ளது.
❖ சேர சோழ பாண்டியநாட்டின் வளம் சிறப்பிக்கப்பட்டுள்ளது.

பெருபாநாற்றுப்படை

❖ 500 அடிகளைக் கொண்டது.
❖ கடியலூர் உருத்திரங் கண்ணனாரால் எழுதப்பட்டது.
❖ குறுநில மன்னன் தொண்டைமான் இளந்திரையனுக்காக எழுதப்பட்டது.




மலைப்படுகடாம் ( கூத்தறாற்றுப்படை )

❖ 583 வரிகளைக் கொண்டது
❖ புலவர் இரணிய முட்டத்துப் பெருங்குன்றூர்ப் பெருங் கௌசிகனாரால் பாடப்பட்டது.
❖ நன்னன் வேண்மானுக்காக எழுதப்பட்டது.
❖ நன்னனின் சிறப்பு நவீரமலையான் தன்மை கானவர்குடி விருந்தோம்பல் போன்றன கூறப்பட்டுள்ளது.

மதுரைக்காஞ்சி

❖ 782 வரிகளைக் கொண்டது.
❖ புலவன் மாங்குடி மருதனாரால் பாடப்பட்டது
❖ பாண்டிய மன்னன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனுக்காக எழுதியது.

நெடுநல்வாடை

❖ 188 அடிகளைக் கொண்டது.
❖ நக்கீரரால் எழுதப்பட்டது.
❖ பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்காக எழுதப்பட்டது. என்று சில அறிஞர்கள் கூறுகின்றனர்.




குறிஞ்சிப்பாட்டு

- 261 அடிகளைக் கொண்டது.
- புலவர் கபிலரால் பாடப்பட்டது.
- ஆரிய மன்னன் பிரகதத்தனுக்கு தமிழரின் களவுமுறை திருமணத்தை இந்த பாடல் மூலம் விவரிக்கின்றார்.

முல்லைப்பாட்டு

- 103 அடிகளைக் கொண்டது.
- புலவர் நப்பூதனார் பாடியது.
- பாண்டிய மன்னன் நெடுஞ்செழியனுக்காக எழுதப்பட்டது.




பட்டினப்பாலை

- 301 அடிகளைக் கொண்டது.
- புலவர் கடியலூர் உருத்திரங்கண்ணனாரால் பாடப்பட்டது.
- சோழ மன்னன் கரிகால் பெருவளத்தானுக்காக எழுதப்பட்டது.

பொருத்தமான விடையினை தெரிவு செய்க.

1) எட்டுத்தொகை நூல்களில் அகப்புற தன்மை கொண்ட நூல்.
   1.அகநானூறு 2. பரிபாடல் 3. கலித்தொகை 4. பதிற்றுப்பத்து

2) பதினெண் மேற்கணக்கு நூல்களில் அதிகமான வரிகளைக் கொண்ட நூல்
   1. குநற்தொகை 2. பட்டினப்பாலை 3. புறநானூறு 4. மதுரைக்காஞ்சி

3) அகத்திணைப் பண்பினை அதிகமாக கொண்டிருந்தும் அதன் மரபினை மீறி புறத்திணையில் உள்வாங்கப்பட்ட நூல்
   1. மதுரைக்காஞ்சி 2. பொருணறாற்றுப்படை 3. நெடுநல்வாடை 4. திருமுருகாற்றுப்படை

4) குறுகிய அடிகளைக் கொண்ட நூல்கள்
   1. அகநாநூறு-நற்றினை
   2. பதிற்றுப்பத்து-பரிபாடல்
   3. குறிஞ்சிப்பாட்டு-முல்லைப்பாட்டு
   4. குறுந்தொகை-ஐங்குறுநூறு

5) அகவல் யாப்பினால் பாடப்படாத இலக்கியங்கள்
   1. திருமுருகாற்றுப்படை-கூத்தராற்றுப்படை
   2. முல்லைப்பாட்டு-பட்டினப்பாலை
   3. கலிப்பா-பரிபாடல்
   4) புறநாநூறு-ஐங்குறுநூறு

கீரிட்ட இடங்களை நிரப்புக.

1) சிறுபாணாற்றுப்படை என்ற நூல் ………………….. எனும் புலவரால் பாடப்பட்டது.

2) மலைபடுகடாமானது ………………………… மலையின் சிறப்பை பாடுகின்றது.

3) மதுரை காஞ்சி எனும் நூல் …………………… வரிகளைக் கொண்டுள்ளது.

4) ஐங்குநுறூற்றில் முல்லை திணையை ……………………….. பாடியுள்ளார்.

5) இறைவனை பாடும் ஒரே ஆற்றுப்படை இலக்கியமாக ……………………..
காணப்படுகின்றது.

## பொருத்தமானவற்றை இணைக்குக.

| | |
|---|---|
| குறிஞ்சிப்பாட்டு | உருத்திரகண்ணனார் |
| மதுரைக்காஞ்சி | நந்தனார் |
| கூத்தராற்றுப்படை | கபிலர் |
| பட்டினப்பாலை | மாங்குடி மருதனார் |
| சிறுபாணாற்றுப்படை | பெரும் கௌசிகனார் |

சரியாயின் சரி எனவும் பிழையாயின் பிழை எனவும் அடைப்புக்குறிக்குள் இடுக.

1) நெடுநல்வாடை என்ற இலக்கியம் பாண்டிய நெடுஞ்செழியனை போற்றி கபிலரால் எழுதப்பட்டது. ( )

2) ஆற்றுப்படை நூல்களில் நான்கு நூல்கள் மன்னர்களின் பெருமைகளை பாட திருமுருகாற்றுப்படை நூல் மாத்திரம் இறைவனின் புகழை பாடுகின்றது. ( )

3) ஐங்குநுறூறு என்ற இலக்கியத்தில் பாலைதிணையை ஓதலாந்தையார் பாடியுள்ளார். ( )

4) முதற்சங்கத்தில் வெண்டொழி வியாழமாலை போன்ற நூல்கள் படைக்கப்பட்டது. ( )

5) புரிபாடல் என்ற இலக்கியத்தில் முருகன் திருமால் வைகைநதி என்பவற்றை சிறப்பிக்கும் பாடல்கள் உள்ளன. ( )

# THANK YOU